# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No.570/2024

Deposition of Witness for L.W.1 / P.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலகிருஷ்ணன் | | : | |
| Father's Name | : | திருப்பதி | Occupation | : | இரவுக்காவலர் |
| Village | : | மோர்ப்பாளையம் | | : | |
| District | : | நாமக்கல் | Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **14.11.2025**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**முதல் விசாரணை:**

நான் மோர்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, ஈரோடு, காவேரி சாலையில் உள்ள ஜோஸ் ஆலுக்காஸ் நிறுவனத்தில் இரவுக்கு காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்து போன ராஜலிங்கம் என்பவர் என்னுடன் மேற்படி நிறுவனத்தில் இரவு காவலராக பணிப்புரிந்தவர் ஆவார். கடந்த 25.05.2019 ஆம் தேதி, அதிகாலை சுமார் 1.00 முதல் 1.10 மணிக்குள், நான் ஜோஸ் ஆலுக்காஸ் நிறுவனத்தின் மெயின் கேட்டு அருகில் அமர்ந்திருந்தேன். விபத்தில் இறந்து போன ராஜலிங்கம் என்பவர் ஜோஸ் ஆலுக்காஸ் நிறுவனத்தின் கந்தசாமி வீதியில் உள்ள கார் பார்க்கிங் அருகில் அமர்ந்திருந்தார். நான் ராஜலிங்கத்தை பார்த்தவாறு அமர்ந்திருந்தேன். சாலையில் குழிகள் பதித்திருந்தார்கள். அப்போது ஒரு வெளிச்சம் குழியில் ஏறி, இறங்கியதாக எனக்கு தெரிந்தது. நான் சட்டென்று எழுந்திருப்பதற்குள், அந்த கார் ராஜலிங்கத்தின் மீது மோதி, ராஜலிங்கம் என் மீது வந்து விழுந்து விட்டார். காரும் கவிழ்ந்து, எனது வலது புற அல்லையில் அடி. நான் சுமார் ஐந்து அடி

தொலைவில் இடது புறமாக தூக்கி வீசப்பட்டேன். நான் எழுந்து பார்த்தபோது நான் அமர்ந்திருந்த நாற்காலிக்கு அருகில் ராஜலிங்கம் அடிப்பட்டு கிடந்தார். அவருக்கு பக்கத்தில் கார் தலைகீழாக கவிழ்ந்து இருந்தது. ஆஜர் எதிரி காரில் இருந்து இறங்கி வெளியே வந்தார். நான் அவரிடம் பெயர் கேட்டபோது, தனது பெயர் ராகுல் என்று கூறினார். அதற்குள் அருகில் இருந்த நிறுவனங்களின் இரவுக்கு காவலர்களும் அங்கு வந்து விட்டார்கள். அங்கு வந்த பொதுமக்கள் சிலரும், அவர்களுடன் சேர்த்து, எங்கள் இருவரையும், ஒரு ஆட்டோ மூலமாக உயிரோடு, அரசு தலைமை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். என்னை மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கினார்கள். என்னுடன் வந்த ராஜலிங்கத்தை பரிசோதித்த போது, அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தார்கள். பின்னர் அன்றைய தினம் அதிகாலை 3.45 to 04.00 மணி அளவில் அங்கு வந்த காவலர்கள் என்னை விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் எத்தனை வருடங்களாக இரவுக்கு காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றால், சுமார் 7 to 8 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். பகலில் வேறு வேலைக்கு செல்வேன் என்றால், இல்லை. எனது பணி நேரம் எத்தனை மணிக்கு ஆரம்பித்து, முடியும் என்றால், இரவு 08.00 மணிக்கு ஆரம்பித்து, காலை 08.00 மணிக்கு முடியும். நான் இருந்த இடத்திற்கும், ஜெனரேட்டர் (Generator) இருந்த இடத்திற்கும் எவ்வளவு அடி தொலைவு தூரம் இருக்கும் என்றால். 2 இருக்கும். ஜெனரேட்டரின் பின்புறம் தான் அமர்ந்திருந்தேன். நான் அமர்ந்திருந்த இடத்திற்கும், ராஜலிங்கம் அமர்ந்திருந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், 20 அடி இருக்கும். எந்த திசையை பார்த்து அமர்ந்திருந்தேன் என்றால், கந்தசாமி வீதியை பார்த்தவாறு அமர்ந்திருந்தேன். ஜோஸ் ஆலுக்காஸ் நிறுவனத்தில் எனக்கும், ராஜேந்திரனுக்கும், ஒதுக்கப்பட்ட பணி

என்வென்றால், அவ்வாறு பணிகள் எதுவும் ஒதுக்கப்படவில்லை. விபத்திற்கு முன்பாக நான் வாகனத்தை பார்க்கவில்லை என்றால், சரியல்ல. ரோட்டில் தோண்டப்பட்டுள்ள குழியில் இறங்கி, ஏறும் போது பார்த்தேன். நான் மருத்துவமனையில் மயக்க நிலையில் இருந்தேனா என்றால், இல்லை.

**மறுவிசாரணை:இல்லை**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the dependent to be correct.

J.M. A.M.C.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No.570/2024

Deposition of Witness for L.W.3 / P.W.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுப்பிரமணியம் | | : | |
| Father's Name | : | ராமசாமி | Occupation | : | Medical Representative |
| Village | : | வேலன் நகர் | | : | |
| District | : | ஈரோடு | Age | : | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.11.2025

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**முதல் விசாரணை:**

நான் ஈரோடு வேலன் நகரில் குடியிருந்து கொண்டு மெடிக்கல் **Representative** ஆக பணிபுரிந்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்து போன ராஜலிங்கம் எனது அண்ணன் அவர். அவர் ஈரோட்டில் உள்ள ஜோஸ் ஆலுக்காஸ் நிறுவனத்தில் இரவு காவலராக பணிபுரிந்து வந்தார். கடந்த 25.05.2019 ஆம் தேதி அன்று அதிகாலையில் நான் வீட்டில் இருந்த போது, ஈரோடு ஜோஸ் ஆலுக்காஸ் நிறுவனத்தில் இரவு காவலராக பணியில் இருந்தபோது, அன்றைய தினம் அதிகாலை சுமார் 01.00 மணி அளவில் எனது அண்ணனுக்கு விபத்து ஏற்பட்டு, இறந்து விட்டதாக தகவல் கிடைத்து, பின்னர் அன்றைய தினம் ஈரோடு, அரசு தலைமை மருத்துவமனையில் பிரேத விசாரணையின் போது, எனது அண்ணனின் பிரேதத்தை அடையாளம் காட்டி உடன் இருந்தேன். இந்த வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் சொன்ன தேதியில், சொன்ன விதத்தில், சொன்னவாறு, போலீசார் என்னை விசாரிக்கவில்லை. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

<u>மறுவிசாரணை:இல்லை</u>

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.